பக்கங்கள் 17

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆனி 02 திங்கட்கிழமை 16.06.2025 | அதிர்வு 316

## ஜேர்மனியிலிருந்து நாடு திரும்பினார் ஜனாதிபதி அநுர



ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, ஜேர்மன் குடியரசுக் கான 03



# நாட்டைக் கட்டியெழுப்ப சகலரும் முன்வாருங்கள்

## ஜேர்மனியிலுள்ள இலங்கைப் பிரஜைகளிடம் ஜனாதிபதி கோரிக்கை

“வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அரசு நிலையான ஆரம்பத்தை எடுத்துள்ளது. எனவே, இலங்கையை வளமான நாடாக மாற்றுவதற்கு எந்தவித பேதங்களும் இன்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.” - என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜேர்மனுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த 04



# யாழ். பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள இராஜேஸ்வரி அம்மனைத் தினமும் வழிபட அனுமதி

யாழ்ப்பாணம், பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

கடுமையான கட்டுப்பாடுகளுடன் , விசேட தினங்களில் மாத்திரம் ஆலயத்துக்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முதல் குறித்த ஆலயத்துக்குத் தினமும் சென்று வழிபாடு செய்வதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர். 04






இன்று இரண்டு முக்கிய மாநகர சபைகளுக்கு மேயர், பிரதி மேயரைத் தேர்வு செய்யும் நடவடிக்கை காலை 9 மணிக்கு இடம் பெற உள்ளது.

ஒன்று தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தது. தலைநகர் கொழும்பின் மேயரைத் தெரிவு செய்யும் தேர்தல்.

மற்றது தமிழர் தாயகத்தில் வவுனியா மாநகர சபையின் முதலாவது முதல்வரைத் தேர்வு செய்வது.

வவுனியா மாநகர சபையில் 21 உறுப்பினர்கள். இவர்களில் 11 பேரை தமிழர் தரப்பு தனக்கு ஆதரவாக திருப்பி இருப்பதாகக் கருதுகிறது. அதனால் மேயர் தெரிவில் வெற்றி தன் பக்கம் என்பது தமிழர் தரப்பின் தீர்மானம்.

ஆனால், இதுவரை மற்றப் பக்கத்தில் 10 உறுப்பினர்களை வைத்திருக்கும் 03

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# செம்மணிப் புதை குழி அகழ்வின் போது யாழ் பல்கலை மாணவரும் பங்களிப்பு?

(ந.லோகதயாளன்)

செம்மணிப் புதைகுழி அகழ்வில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக தொல்லியல் அலகு மாணவர்களையும் ஈடுபடுத்த அனுமதி கோரப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி மீண்டும் 26 ஆம் திகதி முதல் அகழப்படும் சமயம் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் தொல்லியல்த்துறை மாணவர்களையும் ஈடுபடுத்துவதற்கு கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

ாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரியினால் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திடம் உத்தியோகபூர்வமாக இந்த அனுமதி கோரப்பட்டுள்ளது.

26ஆம் திகதி முதல் 45 தினங்களிற்கு அகழ்வுப் பணிக்கான அனுமதியை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் வழங்கியுள்ளது. அக் காலத்தில் இடம்பெறும் அகழ்வுப் பணிக்கான செலவு விவரங்களும் தயார் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த அனுமதிகள் கிடைத்தவுடன் 26 ஆம் திகதி அகழ்வுப் பணி ஆரம்பிக்கப் படும்போது இம்முறை யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர்களும் அதில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.





# முறையான சுகாதார வசதிகள் வழங்கக் கோரி டயகம வைத்தியசாலையின் முன் ஆர்ப்பாட்டம்

## நோயாளர்களை நாய், பேய் என ஏசுகின்றனர் எனவும் குற்றச்சாட்டு

(பொகவந்தலாவ நிருபர்:-எஸ்.சதீஸ்)

நுவரெலியா டயகம பிரதேச வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு கோரி மக்கள் நேற்று முற்பகல் 11 மணிக்கு கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் நேற்று நண்பகல் டயகம பிரதான நகரில் இருந்து டயகம வைத்தியசாலை வரை பேரணியாகப் பதாதைகளை ஏந்தி, கோசங்கள் எழுப்பி கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாகவும், நோயாளர்கள் சிகிச்சைக்காக வரும்போது வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் முறையாக நோயாளர்களுக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுக்காமல், வரும் நோயாளர்களை தவறான முறையில் பேசுகின்றனர் எனவும், அத்தோடு வைத்தியர்கள் வைத்திய நடவடிக்கையில் ஈடுபடுவதில் அக்கறை காட்டுவதில்லை எனவும், இங்கு காணப்படும் குறைபாடுகளை இதுவரை எவரும் செய்து கொடுப்பதற்கு முன்வரவில்லை எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிரதேச மக்கள் தெரிவித்தனர். இந்த ஆர்ப்பாட்டம் சுமார் 3 மணி நேரம் இடம் பெற்றது.

இதேவேளை டயகம பிரதேச வைத்தியசாலையில் இறந்த உடலங்களை வைப்பதற்கு கூட முறையான பிரேத அறைகள் காணப்படுவதில்லை. திடீர் மரணங்கள் ஏற்படுகின்ற போதும் பிரேத பரீசோதனைக்கு நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு சடலம் அனுப்பபடுகின்ற போது உறவினர்களுக்கு சடலம் கிடைப்பதற்கு மூன்று நாள்கள் வரை செல்லுகின்றன. வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்களை நாய், பேய் ஏசுகின்றனர்.

மாதாந்த சுகாதார பரீசோதனைக்கு வருகின்ற நோயாளர்கள் வரிசையில் நிற்கும் போது அவர்களுக்கான முதலிடம் அங்கு வழங்கப்படுதில்லை எனவும், வீட்டில் இருந்து கொண்டு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அறிவிப்பவர்களுக்கு முதலிடம் வழங்கப்படுவதாகவும், முறையாக மருந்துகளை வழங்குவதில்லை எனவும், மருந்துகளை நோயாளர்களுக்கு தூக்கி எறிகின்றனர் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

எனவே இந்த அரசாங்கதின ஊடாக நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரகசியம் பரகசியம்...**

தேசிய மக்கள் சக்தி ஏதோ ஜகதலப் பிரதாபம் பண்ணி, தாம் வெற்றியை ஈட்டி விடுவோம் என்று நேற்று மாலையும் அறிவித்து இருக்கின்றது.

வவுனியா மாநகர சபைக்கு நடைபெற்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி, காதர் மஸ்தான் எம்.பியின் இலங்கை தொழிலாளர் கட்சி ஆகியவை தலா நான்கு உறுப்பினர்களை பெற்றிருந்தன. அத்தோடு இரண்டு சுயேச்சைக் குழு உறுப்பினர்களும் சேர மொத்தம் 10 பேர் அவர்கள் பக்கத்தில் உள்ளனர்.

ஆனால் மறுபக்கத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் நால்வர், தமிழரசு தரப்பில் மூவர், சிறிரெலோ உதயராஜாவின் ஜனநாயகத் தேசிய கூட்டணி சார்பில் ஒருவர், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் இருவர், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் ஒருவர் என மொத்தம் 11 பேர் இருக்கின்றனர்.

இந்தப் பதினொரு பேரில் ஒருவரை யாவது கட்சி மாறப் பண்ணி, தங்கள் பக்கத்துக்கு இழுப்பதற்கு தேசிய மக்கள் சக்தியும் காதர் மஸ்தானின் கட்சியும் துடியாய்த் துடிக்கின்றன. அதில் அவர்கள் வெற்றி பெறுவார்களா என்பது இன்று காலை 10 மணியளவில் தெரிந்து விடும்.

ஆனால் தமிழர் தரப்பை பொறுத்த வரை இந்தத் தேர்தல் மிக முக்கியமானது. வவுனியா மாநகர சபை முதன்முறையாக தேர்தலைச் சந்திக்கின்றது. ஆயினும் வவுனியா மாநகர சபைக்கான எல்லை மதிப்பீட்டு நிர்ணயம் இன்னும் முடியவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் தேசிய மக்கள் சக்தி – தொழிலாளர் கட்சி கூட்டுப் பக்கம் மேயர் பதவி சிக்குமானால், வவுனியா மாநகர சபைக்கான எல்லை நிர்ணயத்தின் போது வவுனியா நகரை ஓட்டிய சிங்களப் பிரதேசங்கள் புதிதாக வவனியா மாநகர சபையுடன் இணைக்கப்பட்டு – கோர்த்து விடப்பட்டு – மாநகர சபை பிரதேசம் சிங்களப் பெரும்பான்மை கொண்டதாக மாற்றப்படும் ஆபத்து உள்ளது. ஆகையினால் தான் தமிழ் கட்சிகள் தமக்குள்ளான வேறுபாடுகளை மறந்து, ஒற்றுமைப்பட்டு நின்று, இந்த மேயர் பதவியை தங்கள் வசம் தக்க வைத்துக் கொள்வதில் தீவிரமாக இருக்கின்றன என்று விடய மறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளின்படி, கொழும்பு மாநகர சபையிலும் ஆட்சியை அமைப்பதற்கு எந்தவொரு கட்சியும் அல்லது சுயேச்சைக் குழுவும் முழுமையான வெற்றியைப் பெறவில்லை.

தேசிய மக்கள் சக்திக்கு 48 ஆசனங்களும், ஐக்கிய மக்கள் சக்திகு 29 ஆசனங்களும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 13 ஆசனங்களும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஐந்து ஆசனங்களும் கிட்டியிருந்தன.

மேலும், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்க்கு நான்கு ஆசனங்களும், சுயேச்சைக் குழு எண் 03 இற்கு மூன்று ஆசனங்களும், சர்வஜன அதிகாரம் கட்சிக்கு இரண்டு ஆசனங்களும், ஐக்கிய சமாதான கூட்டணிக்கு இரண்டு ஆசனங்களும், சுயேச்சைக் குழு எண் 04 மற்றும் 05 ஆகியவற்றுக்கு தலா இரண்டு ஆசனங்களும் கிடைத்திருந்தன.

எனினும், 117 உறுப்பினர்களைக் கொண்ட கொழும்பு மாநகர சபையில் ஆட்சியை அமைப்பதற்கு ஒரு கட்சிக்கு 59 உறுப்பினர்கள் தேவைப்படும் நிலையில் யாரும் பெரும்பான்மையைப் பெற்றிருக்கவில்லை.

இந்நிலையில், கொழும்பு மாநகர சபையின் ஆட்சியை அமைப்பது தொடர்பாக அதன் முதல் கூட்டம் இன்று காலை நடைபெறுகிறது.

ஆளும் தேசிய மக்கள் சக்தி அறுதிப் பெரும்பான்மையை பெறுவதற்கு அதற்கு இன்னும் குறைந்தது 11 உறுப்பினர்களின் ஆதரவு மட்டுமே தேவை. அண்மையே தினங்களில் நடந்த 'குதிரைப் பேரத்தில்' தேவையான உறுப்பினர்கள் எண்ணிக்கையை தேசிய மக்கள் சக்தி 'வாங்கி விட்டதாக' தகவல் உண்டு. அதனால் மேயர் பதவி தேசிய மக்கள் சக்தி பக்கமே வீழும் என்ற பேச்சே அதிகம் அடிபடுகின்றது.

**ஜேர்மனியிலிருந்து...**

உத்தியோகபூர்வ விஜயத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து கொண்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நாடு திரும்பினார் என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, ஜனாதிபதி ஜேர்மன் ஜனாதிபதி பிராங்க் வால்டர் ஸ்டெய்ன்மியர், ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் கலாநிதி ஜொஹான் வடேபுல் மற்றும் ஜேர்மன் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சர் ரீம் அலபாலி ரடோவன் ஆகியோரைச் சந்தித்து இரு தரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

அதன்போது, அரசின் முன்னுரிமைகளின் அடிப்படையில் வர்த்தகம், டிஜிட்டல் பொருளாதாரம், முதலீடு மற்றும் தொழில் பயிற்சி போன்ற துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான புதிய வழிகளை ஆராய்வது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், ஜேர்மனியின் சுற்றுலா மற்றும் சுற்றுலாத் தொழில் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலும் ஜனாதிபதி பங்கேற்றார்.

ஜேர்மன் வர்த்தக மற்றும் தொழில் துறை சபையால் அந்தச் சங்கத்தின் தலைமையகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட வர்த்தக சந்திப்பிலும் கலந்துகொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அதில் சிறப்புரையும் நிகழ்த்தினார்.

ஜனாதிபதி தனது உத்தியோகபூர்வ விஜயத்தின் போது ஜேர்மனியில் வாழும் இலங்கை சமூகத்தினரையும் சந்தித்தார்.

இந்த விஜயத்தில் ஜனாதிபதியுடன் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகள் குழுவினரும் கலந்துகொண்டனர்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## நாட்டைக் கட்டியெழுப்ப...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அங்கு வசிக்கும் இலங்கையர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு உரையாற்றினார்.

ஜேர்மனியில் வசிக்கும் இலங்கையர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் சந்திப்பில் ஜேர்மனியில் வசிக்கும் இலங்கை வர்த்தகர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் பலர் கலந்துகொண்டிருந்ததுடன் அவர்கள் ஜனாதிபதியை உற்சாகத்துடன் வரவேற்றனர்.

வெளிநாட்டலுவல்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், ஜேர்மனிக்கான இலங்கைத் தூதுவர் வருணி முதுகுமாரன, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா பிரிவின் பணிப்பாளர் நாயகம் சுகீஷ்வர குணரத்ன உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

இதன்போது அங்கு உரையாற்றிய ஜனாதிபதி,

“இலங்கையை வளமான நாடாக மாற்றுவதற்கு எந்தவித பேதங்களும் இன்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

நமது பொருளாதாரத்துக்கு வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் வழங்கும் பங்களிப்பைப் பாராட்டுகின்றேன்.வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு நமது அரசு நிலையான ஆரம்பத்தை எடுத்துள்ளது.” – என்றார்.






## யாழ். பலாலி...

அதற்கமைய நேற்று ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

இதில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், இராணுவ உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.








# கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்கப்போவது யார்?

## மேயர் தெரிவு இன்று

கொழும்பு மாநகர சபையின் மேயர், பிரதி மேயரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதேசமயம், கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அமைப்பதற்கு ஆளும் தேசிய மக்கள் சக்தியும் எதிர்க்கட்சிகளும் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளின்படி கொழும்பு மாநகர சபையில் எந்தவொரு கட்சியும் அல்லது சுயேச்சைக் குழுவும் பெரும்பான்மை பெறவில்லை.

மொத்தம், 117 உறுப்பினர்களைக் கொண்ட கொழும்பு மாநகர சபையில், தேசிய மக்கள் சக்தி 48 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 29 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 13 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 5 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 4 ஆசனங்களையும், சுயேச்சைக் குழு – 03 மூன்று ஆசனங்களையும், சர்வஜன அதிகாரம் 2 ஆசனங்களையும், ஐக்கிய சமாதானக் கூட்டணி 2 ஆசனங்களையும், சுயேச்சைக் குழு – 04, சுயேச்சைக் குழு 05 என்பன தலா இரண்டு ஆசனங்களையும் கொண்டுள்ளன.

கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்க 59 உறுப்பினர்கள் தேவைப்படும். ஆனால், எந்தக் கட்சியும் பெரும்பான்மை பெற்றிருக்கவில்லை.

இந்நிலையில், கொழும்பு மாநகர சபையின் ஆட்சியை அமைப்பது தொடர்பாக அதன் முதல் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கான நேபாள தூதுவர் பிரதமர் ஹரிணியுடன் சந்திப்பு





இலங்கைக்கான நேபாளத் தூதுவர் பூர்ணா பகதூருக்கும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கும் இடையிலான சந்திப்பொன்று பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது பிரதமர் நேபாளத் தூதுவரை வரவேற்றதுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால இராஜதந்திர உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு குறித்து இலங்கையின் நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் இரு தரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன் இலங்கையில் வசிக்கும் நேபாள நாட்டினர் எதிர்கொள்ளும் விசா தொடர்பான பிரச்சினைகள் உட்பட பல பிரச்சினைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

பிரதமருடன் ஒரு பயனுள்ள உரையாடலில் ஈடுபட வாய்ப்பு கிடைத்ததற்கு நேபாள தூதுவர் நன்றி தெரிவித்தார். மேலும் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்பு மற்றும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான நேபாளத்தின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார்.

இந்த சந்திப்பில் பிரதமர் அலுவலகத்தின் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) ஜே.எம்.ஐ.ஆர்.கே. ஜயசுந்தர பிரதமர் அலுவலகத்தின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) சாகரிகா போகஹவத்த மற்றும் வெளியுறவு,வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் தெற்காசியா மற்றும் சார்க் பிரிவின் பணிப்பாளர் நாயகம் நிலுக கந்துருகமுவ உள்ளிட்ட சிரேஷ்ட அரச அதிகாரிகளும் பலரும் பங்கேற்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மருந்துத் தட்டுப்பாடா?

மக்களின் அத்தியாவசிய சேவைகள் தொடர்பில் அரசு அதிகாரிகளும், தொழில்சார் நிபுணர்களும், தொழிற்சங்கவாதிகளும், அரசியல்வாதிகளும் சண்டப்பிரசண்டம் செய்வது வழமையாகி விட்டது.

அதுவும் மக்களின் சுகாதார, மருத்துவ சேவையை ஒட்டி இந்தப் பிரகண்டங்கள் - குடுமிப்பிடிச் சண்டைகள் - தீவிரமடைந்திருப்பது வேதனைக்குரியது.

நாட்டில் மருத்துவ சேவையில் மருந்துகளின் தட்டுப்பாடு குறித்து மாறி மாறி குற்றம் சாட்டும் போக்கு வெளிப்பட்டு இருக்கின்றது.

மத்திய மருந்து சேமிப்பு மையங்களில், சுமார் 180 அத்தியாவசிய மருந்துகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதேநேரம், மருத்துவமனைகளுக்குள், சுமார் 50 வகையான அத்தியாவசிய மருந்துகள் பற்றாக்குறையாக உள்ளன என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வைத்தியர் சமில் விஜேசிங்க இரண்டொரு நாள்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

வலி நிவாரணிகள், நுண்ணுயிர் எதிர்ப்பிகள், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் மற்றும் சிறுநீரக நோய்களுக்கான மருந்துகள் உள்ளிட்ட பல அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், கடந்த பல மாதங்களாக புற்றுநோய் நோயாளிகளுக்கான மருந்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும், இதன் விளைவாக புற்றுநோய் நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதில் சில வரையறைகள் ஏற்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதே சமயம், "கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கையிருப்பில் இருக்க வேண்டிய அத்தியாவசிய மருந்துகளான நோய் எதிர்ப்பு மருந்துகள், மயக்க மருந்து, தொற்று நோய் மற்றும் தொற்றா நோய்க்காக வழங்கப்படும் மருந்துகளுடன், அத்தியாவசியமற்ற மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அத்துடன் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் சி.ரி.ஸ்கான், எம்.ஆர்.ஐ. ஸ்கான் ஆகிய கதிரியல் பரிசோதனைகளும் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ள நிலையில் வைத்தியசாலைக்கு வருகைத் தரும் நோயாளர்கள் கடும் அசௌகரியத்துக்குள்ளாகியுள்ளனர். பரிசோதனை அறிக்கைகளை வழங்குவதற்கான கணினி இணைப்பில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாக இவ்வாறானதொரு நிலை உருவாகியுள்ளது. எனினும் உரிய தரப்பினர் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் இதுவரை முன்னெடுக்கவில்லை." - என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ நேற்றுத் தெரிவித்திருக்கின்றார்.

ஆனால், "மத்திய மருந்து களஞ்சிய சாலையில் 180 மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பினும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் மருந்துகளுக்குப் பற்றாக்குறை ஏற்படாது. பிரதேச மருந்து களஞ்சியசாலையில் தேவையான மருந்துகள் உள்ளன. தேவை ஏற்படின் அவற்றை வெளியில் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன" - எனச் சுகாதார மற்றும் வெகுசன ஊடக பதில் அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்தார்

"நாட்டில் உள்ள அரச மருத்துவ மனைகளில் உயர்தர மருந்துகளுக்கு தட்டுபாடு ஏற்பட்டுள்ளதாக ஒரு சில தரப்பினர் ஊடகங்கள் வாயிலாக வதந்திகளை பரப்பி வருகின்றனர். உண்மையில் அரச மருத்துவ மனைகளில் அவ்வாறு நீரிழிவு மற்றும் உயர் குருதியழுத்தம் உள்ளிட்ட நோய்களுக்கு வழங்கப்படும் மருந்துகளுக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படவில்லை. எனினும் குறிப்பிட்ட ஒரு சில மருந்து விநியோக நடவடிக்கைகள் ஸ்தம்பித்துள்ளமை தொடர்பில் தெரிய வந்துள்ளது. அவற்றைச் சீரமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது இன்று, நேற்று அல்ல, இந்நாட்டில் நீண்ட காலமாக இருந்து வரும் பிரச்சினையாக உள்ளது. ஆகையால் அதற்கு முழுமையான தீர்வை வழங்க சுகாதார அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தற்போது இந் நிலைமை ஓரளவு கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மத்திய மருந்துக் களஞ்சியசாலையில் உள்ள தரவுகளை மாத்திரம் கொண்டு அரச மருத்துவமனைகளில் மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக கூற முடியாது." - என்று அவர் பீற்றியிருக்கின்றார்.

எது,எப்படியென்றாலும் மருந்துப் பொருள் தட்டுப்பாடும், மருத்துவ சேவையின் மட்டுப்பாடுகளும் அப்பாவிப் பொதுமக்களின் உயிரிழப்புக்குக் காரணமாகாவிட்டால் சரி...!



# பசு கட்டியிருந்த கயிற்றில் சிக்கிய சிறுவன் பசுவுடன் நீண்ட தூரம் இழுபட்டு உயிரிழப்பு

(உடப்பு க.மகாதேவன்)

அநுராதபுரத்தில் பசுவின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த கயிற்றில் சிக்கி 9 வயது சிறுவன் ஒருவன் நேற்று முன்தினம் உயிரிழந்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

அநுராதபுரம் விஹாரபலுகம வித்யாராஜா கல்லூரியில் 4 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் சிறுவனே இந்தத் துரதிர்ஷ்டவசமான விபத்தைச் சந்தித்துள்ளான்.

சிறுவன் வேறு சில நண்பர்களுடன் பக்கத்து வீட்டில் வளர்க்கப்பட்ட ஒரு பசுவுடன் விளையாடிக் கொண்டிருந்தபோது, குழப்பமடைந்த பசு அங்கிருந்து வீதியில் ஓடியுள்ளது. அங்கு, துரதிர்ஷ்டவசமாகச் சிறுவனும் பசுவின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த கயிற்றில் சிக்கி, கிட்டத்தட்ட 900 மீட்டர் தூரம் இழுத்துச் செல்லப்பட்டு, பலத்த காயமடைந்த நிலையில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான்.

இருப்பினும், தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிறுவன் நேற்று முன்தினம் மதியம் உயிரிழந்துள்ளான்.

# மட்டக்களப்பில் நாய் கடித்த பக்கத்து வீட்டுப் பெண்ணுக்கு 40 ஆயிரம் ரூபா நஷ்டஈடு செலுத்திய நாயின் உரிமையாளர்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகரில் பக்கத்து வீட்டுக் காரரின் நாய் கடித்ததில் காயமடைந்த பெண் ஒருவர் தனக்கு ஏற்பட்ட பாதிப்புக்கான நஷ்டஈட்டை நாயின் உரிமையாளர் வழங்கவேண்டும் என பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து நாயின் உரிமையாளர் அந்த பெண்ணுக்கு 40 ஆயிரம் ரூபாவை செலுத்திய சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதுபற்றி தெரியவருவதாவது:-

நகரிலுள்ள வீதி ஒன்றில் வாழ்ந்துவரும் ஓய்வு நிலை கல்வி ஆசிரிய ஆலோசகர் வீட்டில் மூன்று நாய்கள் பாராமரிக்கப்பட்டு வருகின்றன. பக்கத்து வீட்டில் வசித்துவரும் ஓய்வு பெற்ற முன்னாள் கல்வி அதிகாரியின் உறவினர்கள். அந்த நாய்க அடிக்கடி கடிக்க சென்ற சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதனால் பக்கத்து வீட்டாருடன் முரண்பாடு ஏற்பட்டு வந்துள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நாயின் உரிமையாளர் நாய்களை அவிழ்த்து விட்ட நிலையில் பக்கத்து வீட்டொ பெண் ஒருவருக்கு நாய் கடித்து அவர் காயமடைந்துள்ளார்.

இதனையடுத்து நாயின் உரிமையாளருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் கடிவாங்கிய பெண் முறைப்பாடு



செய்துள்ளார் நாயின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டு இரு சாராரிடமும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். பாதிக்கப்பட்ட பெண் நாய் கடித்ததற்கு தடுப்பு ஊசி போடவேண்டும் எனத் தெரிவித்துத் தனக்குத் நஷ்டஈடாக 40 ஆயிரம் ரூபா வழங்க வேண்டும் எனக் கோரினார்.

இந்த விசாரணையை தொடர்ந்து நாய் உரிமையாளர் பக்கத்து வீட்டு பெண்ணுக்கு 40 ஆயிரம் ரூபாவை வழங்க இணக்கப்பாட்டுக்கு வந்தமையையடுத்து அந்த முறைப்பாட்டை பொலிஸார் முடிவுக்கு கொண்டு வந்தனர்.



# வவுனியா மாநகரசபை தங்களிடமே என்கிறது தேசியமக்கள் சக்தி தரப்பு

(கி.வசந்தன்)

வவுனியா மாநகரசபையின் ஆட்சியை தாங்களே கைப்பற்றுவார்கள் என தேசியமக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இன்றைய தினம் வவுனியா மாநகர சபைக்கான முதல்வர்,பிரதி முதல்வர் தெரிவுகள் இடம்பெறவுள்ள நிலையில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வன்னிபிளாசா விடுதியில் நேற்று இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தி, இலங்கை தொழிலாளர் கட்சி மற்றும் சுயேச்சைக் குழுவின் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கு பற்றியிருந்தனர்.

இதன்பின்னர் கருத்து தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் மாநகரசபை உறுப்பினர் சிவசங்கர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாம் சில தரப்புக்களுடன் பேசியிருக்கின்றோம். இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டுள்ளன. அந்த வகையில் தேசிய மக்கள் சக்தியால் சிறந்த ஒரு அதிகாரத்தை வழங்க முடியும் என்று நினைக்கும் கட்சிகள் எமக்கு ஆதரவினை வழங்கும். எனவே மாநகர சபையின் ஆட்சியினை நாம் கைப்பற்றுவதற்கு எதிர்பார்த்திருக்கின்றோம். – என்றார்.




# வவுனியா மாநகர முதல்வராக காண்டீபனை முன்னிறுத்தத் தமிழர்கள் தரப்பில் தீர்மானம்

## பிரதி முதல்வர் பதவிக்கு கார்த்தீபனைப் பிரேரிக்க முடிவு

(கி.வசந்தன்)

வவுனியா மாநகரசபைக்கான முதல்வர், பதில் முதல்வர் தெரிவுகள் இன்றையதினம் இடம்பெறவுள்ள நிலையில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் உறுப்பினர் முதல்வராகவும், ஜனநாயகத் தேசிய கூட்டணியின் உறுப்பினர் பிரதி முதல்வராகவும் பிரேரிக்கப்படவுள்ளன எனத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அவரது அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

21 உறுப்பினர்களை கொண்டுள்ள வவுனியா மாநகரசபையில் ஆட்சி அமைப்பதற்கு 11 ஆசனங்கள் தேவை.

அந்தவகையில் சபையில் ஆட்சி அமைப்பது தொடர்பாக தமிழ் கட்சிகளினால் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்று எட்டப்பட்டிருந்தது.

அதற்கமைய ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி பெற்றுக்கொண்ட நான்கு ஆசனங்களும், தமிழரசுக்கட்சி பெற்றுக் கொண்ட மூன்று ஆசனங்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டு ஆசனங்கள், ஜனநாயக தேசிய கூட்டணியின் ஒரு ஆசனம், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் ஒரு ஆசனம் என 11ஆசனங்கள் கைவசம் உள்ளன.

எட்டப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஜனநாயகத் தமிழ்த்தேசிய கூட்டணியில் தெரிவு செய்யப்பட்டிருந்த முன்னாள் நகரசபை உறுப்பினரும், ஆசிரியருமான சுந்தரலிங்கம் காண்டீபன் முதல்வராக பெயரிடப்படவுள்ளார்.

ஜனநாயக தேசியக் கூட்டணி சார்பில் தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர் பரமேஸ்வரன் கார்த்தீபன் பிரதி முதல்வராக பெயரிடப்படவுள்ளார்.

இந்தக் கூட்டுக்கு ஆட்சி அமைக்கத்தேவையான 11ஆசனங்கள் உறுதியாகியுள்ள நிலையில் நாளை எதிர்பார்க்கப்பட்ட படி இந்தக்கூட்டே ஆட்சியமைக்கும். – எனத் தெரிவித்தார்.







# தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் நூற்றாண்டை முன்னிட்டு இலவச மருத்துவ முகாம்

(பொகவந்தலாவ நிருபர்:- எஸ்.சதீஸ்)

தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் 100 ஆவது ஆண்டை முன்னிட்டு ஆராய்ச்சி நிலையத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் ஒன்று நேற்று ஞாயிற்றுக் கிழமை தலவாக்கலை சென் கூம்ஸ் தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த இலவச மருத்துவ முகாமில் இளைஞர், யுவதிகள், முதியோர்கள் என 1500கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த மருத்துவ முகாமில் பேராதெனிய, நுவரெலியா, டிக்கோயா ஆகிய வைத்தியசாலைகளில் உள்ள வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள 60கும் மேற்பட்டோர் வருகை தந்து இலவச மருத்துவ முகாமில் அவர்களது சேவையை வழங்கினர்.

இதன் போது குருதி, கண், சிறுநீரகம், இருதயம், பற்சிகிச்சை போன்ற பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இதில் தேயிலை ஆராச்சி நிலையத்தின் தலைவர் டபிள்யூ.ஏ.ஜே.எம். டி கோஸ்டா, நிலையத்தின் பணிப்பாளர் எம்.ஏ.பி.ரணதுங்க, விரிவுரையாளர்களான உதய ரளபணவ, மனோஜ் பத்திரிகே எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# திருகோணமலையில் சங்குச் சின்ன உறுப்பினர்கள் செல்வம் எம்.பி. முன்பாக நேற்று சத்தியப்பிரமாணம்

(எஸ்.கீதபொன்கலன்)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்(சங்கு) சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 9 உறுப்பினர்களும் நேற்று தமிழீழ விடுதலை இயக்கத்தின்(ரெலோ)தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் முன்னிலையில் திருகோணமலையில் வைத்து சத்திய பிரமாணம் செய்து கொண்டனர்.

திருகோணமலையின் 3 உள்ளூராட்சி சபைகளில் இக் கூட்டமைப்பு 9 உறுப்பினர்களை பெற்றுள்ளது.

இக்கூட்டமைப்பில் உள்ள ரெலோ,ஈ.பி.ஆர்.எல்.எவ்.,புளொட், ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பன இணைந்து சங்கு சின்னத்தில் போட்டியிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.













# அதிகரிக்கும் காற்றின் வேகம் கடல் கொந்தளிப்பு எச்சரிக்கை

நாட்டை சூழவுள்ள கடற்பிராந்தியங்களில் காற்று, தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதன்படி, சிலாபத்திலிருந்து புத்தளம் மற்றும் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பிராந்தியங்களிலும், மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்களிலும், மணிக்கு 35 – 45 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும்.

அதேநேரம், இடைக்கிடையில் 60 – 70 கிலோமீற்றர் வேகத்தில் காற்று அதிகரித்து வீசக்கூடும். சிலாபத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக மாத்தறை வரையான கடற்பிராந்தியங்களிலும், காங்கேசன்துறையிலிருந்து முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஊடாக வாகரை வரையான கடற்பிராந்தியங்களிலும் மணித்தியாலத்துக்கு 50 – 55 கிலோமீற்றர் வரை காற்று அதிகரித்து வீசும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடற்றொழிலாளர்கள் மிகவும் அவதானத்துடன் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு, வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# யாழில் ஹெரோயினுடன் இளைஞர் ஒருவர் கைது!



யாழ்ப்பாணத்தில் 2 கிராம் 140 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருளை உடமையில் வைத்திருந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைதான சந்தேகநபர் 28 வயதுடையவர் என்றும், அவர் யாழ். மணியந்தோட்டம் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



# தொடரும் சீரற்ற காலநிலையால் ஆறுகளின் நீர் மட்டம் அதிகரிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையினால், களுகங்கை, மாகுறு கங்கை மற்றும் குடா கங்கையின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதாக நீர்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனால், குறித்த கங்கைகளை அண்மித்த தாழ் நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் பலத்த காற்று வீசும் என அனர்த்த முகாமைத்துவ மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மத்திய மலை நாட்டின் மேற்கு சரிவுகளிலும், திருகோணமலை மாவட்டம் உட்பட வடக்கு, வடமத்திய, மேற்கு, சப்ரகமுவ, வடமேற்கு மற்றும் தெற்கு மாகாணங்களிலும் சில நேரங்களில் மணிக்கு 50-60 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்று அனர்த்த முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

எனவே,பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறும், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறும், அனர்த்த முகாமைத்துவ மையம் கோரியுள்ளது.

தேவைப்பட்டால் உதவிக்கு 117 அவசர தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளுமாறும் அனர்த்த முகாமைத்துவ மையம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

# நாட்டின் சில பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை



சீரற்ற வானிலை காரணமான நாட்டின் சில பகுதிகளுக்கு முதலாம் மற்றும் இரண்டாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு, காலி, களுத்துறை, கண்டி, கேகாலை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த முதலாம் நிலை மண்சரிவு எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி மற்றும் அயகம பிரதேச செயலக பிரிவுகளுக்கு இரண்டாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

இதேவேளை, சீரற்ற காலநிலையினால் நுவரெலியா மாவட்டத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள கால்நடைகளும் பாதிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சீரற்ற காலநிலையினால் நாடு முழுவதும் 97 குடும்பங்களைச் சேர்ந்த 353 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

# எலிக்காய்ச்சலால் பரவல் தீவிரம்; அவதானத்துடன் செயற்படுங்கள்




நாட்டில் நிலவிவரும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக எலிக் காய்ச்சலால் பரவல் தீவிரமடைந்துள்ள துடன் தொற்றுக்குள்ளாகியுள்ளவர்க ளின் எண்ணிக்கையும் பாரியளவில் அதிகரித்துள்ளதுடன் பொதுமக்கள் எலிக்காய்ச்சல் தொடர்பில் அவதானத் துடன் செயற்படுமாறு விசேட வைத் திய நிபுணர் துஷானி பெரேரா தெரிவித் துள்ளார்.

எலிக்காய்ச்சல் பரவல் குறித்து சுகா தார மேம்பாட்டுப் பணியகத்தின் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார், அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

“லெப்டோஸ்பைரா எனப்படும் ஒரு வகை பற்றீரியா தொற்றால் இக்காய்ச்சல் ஏற்படுகிறது. நோய்த் தொற்றுக்கு ஆளான எலிகளின் சிறுநீர் மூலம் மனி தர்களுக்கு பரவுவதால் எலிக்காய்ச்சல் என அழைக்கப்படுகிறது. அண்மை காலமாக நாட்டில் நிலவிவரும் மழையு டன் கூடிய காலநிலை காரணமாக எலிக்காய்ச்சல் தீவிரமாக பரவி வருவது டன் தொற்றாளர்களின் எண்ணிக்கை யும் பாரியளவில் அதிகரித்துள்ளது. மழை மற்றும் பருவகால நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அடை யாளம் காணப்படும் எலிக்காய்ச்சல் நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

குறிப்பாக இரத்தினபுரி குருநா கல், கேகாலை, கம்பஹா மற்றும் களுத்துறை போன்ற மாவட்டங்க ளில் தொடர்ச்சியாக அதிகளவான தொற்றாளர்கள் பதிவாவதை அவ தானிக்கக்கூடியதாக உள்ளது. பற் றீரியா பரவியுள்ள நீர்நிலைகள், சதுப்பு நிலங்களில் நடமாடுதல், விளையாடு தல், பயிர்ச்செய்கை மற்றும் அகழ்வு பணிகளில் ஈடுபடுவதன் மூலம் தொற்று ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. ஆகையால் பயிர்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் அவதானத்துடன் செயல்படுவது நல் லது. மேலும் சுற்றுலாவுக்காக செல் வோர் நீர் தேங்கியுள்ள பகுதி கள் மற்றும் பழக்கமில்லாத நீர்நிலை களில் நீராடுதல், விளையாட்டு சாக சங்களில் ஈடுபடுவதையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

நோய் அறிகுறிகள் வெளிப்பட சுமார் 7 தொடக்கம் 14 நாட்களாகக் கூடும். ஆகையால் அதானம் மிக்க பகுதிகளில் வசிப்பவர்கள் மற்றும் விவசாயம், இரத் தினக்கல் அகழ்வு பணியை மேற் கொள்பவர்கள் காய்ச்சல்கள் ஏதும் ஏற்படின் உடனடியாக வைத்திய சாலையை நாடுவது நல்லது. நோய்த் தொற்றுக்கு ஆளானவரிடம் கடுமையான காய்ச்சல், தலைவலி, உடல் வலி, கண் சிவத்தல், வாந்தியும் குமட்டலும் போன்ற அறிகுறிகள் தென்படலாம். விவசாயிக ளின் நலன் கருதி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்கள் மூலம் நோய் எதிர்ப்பு மருந்து வழங்கப்படுகிறது. அவற்றை பொது சுகாதார அதிகாரி களின் பரிந்துரைக்கமைய பெற்றுக் கொள்ளலாம்.” என்றார்.

# இஸ்ரேலில் நடத்தப்பட்ட தாக்குதலில் இலங்கைப் பெண்ணொருவர் காயம்

இஸ்ரேலின் – பேட் யாம் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் இலங் கைப் பெண்ணொருவர் சிறு காயங்க ளுக்கு உள்ளாகியுள்ளார்.

இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார இதனைத் தெரிவித் துள்ளார்.

தாம் அந்தப், இலங்கை பெண் ணைத் தொடர்புகொண்டு பேசிய போது, கண்ணாடி சிதறியதால் தமது கையில் கீறல் ஏற்பட்டதாகவும், வேறு பாதிப்புகள் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார் என இலங்கை தூதுவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ஈரானிய ஏவு கணை தாக்குதலால் ஏற்பட்ட அதிர் வையடுத்து, டெல் அவிவின் தெற்கே உள்ள வீடொன்றில் பணிபுரிந்து வந்த இலங்கைப் பெண் ஒருவர், நேற்று அதி காலை தாம் பணியாற்றி வந்த வீட்டில் உள்ளவர்களுடன் அங்கிருந்து வெளி யேறியுள்ளார்.

24 மணிநேரமும் நிலைமைகளைத் தூதரகம் கண்காணித்து வருவதாகவும், தாக்குதல்களால் எவரேனும் பாதிக்கப் பட்டிருப்பின் தூதரகத்தைத் தொடர்பு கொள்ளுமாறும், இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார கோரியுள்ளார்.



இஸ்ரேலின், டெல் அவிவ் மற்றும் ஹைஃபா நகரங்கள் மற்றும் அவற்றைச் சூழவுள்ள பகுதிகளை இலக்கு வைத்து நேற்று அதிகாலை வரை ஈரான் ஏவு கணைத் தாக்குதல்களை நடத்தியுள் ளது.

## அகமதாபாத் விமான விபத்து:

# டி.என்.ஏ. சோதனையில் 31 பேர் அடையாளம்

கடந்த வியாழக்கிமை அகமதாபாத்தில் நடந்த ஏர் இந்தியா விமான விபத்தில் பலியானோரின் உடல்களில் நடத்தப்பட்ட டி.என்.ஏ. பரிசோதனையில் இதுவரை 31 பேரின் அடையாளம் உறுதி செய்யப்பட்டுள்ளது. 12 உடல்கள் அந்தந்த குடும்ப உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

விமான விபத்தில் உயிரிழந்த குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி உட்பட பலரை அடையாளம் கண்டறியும் டி.என்.ஏ. சோதனை இன்னும் நடைபெற்று வருவதாக பி.ஜே. மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் அறுவை சிகிச்சை பேராசிரியர் டாக்டர் ரஜ்னிஷ் படேல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பேசிய ரஜ்னிஷ் படேல் மேலும் தெரிவிக்கையில்,


“தற்போது வரை மொத்தம் 31 உடல்களின் டி.என்.ஏ. அடையாளம் காணப்பட்டுள்ளது. அவற்றில் 12 உடல்கள் அந்தந்த குடும்ப உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மற்றவர்கள் வந்து தங்கள் உறவினர்களின் உடல்களை சேகரிப்பதற்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

முன்னாள் முதல்வர் விஜய் ரூபானியின் உடலை அடையாளம் காணும் பணி இன்னும் நடந்து வருகிறது. சேகரிக்கப்பட்ட மாதிரிகளுடன் அவரது டிஎன்ஏ இன்னும் பொருந்தவில்லை. அவரது உடலை அடையாளம் கண்டவுடன் பத்திரிகையாளர்களுக்கு தகவல் தெரிவிப்போம்.” என்றார்.

இதுகுறித்து பேசிய குஜராத் நிவாரண ஆணையரும் வருவாய்த் துறையின் செயலாளருமான அலோக் குமார் பாண்டே,

“மாநில அரசு 11 வெளிநாட்டினரின் குடும்பங்களுடன் தொடர்பை ஏற்படுத்தியுள்ளது. இறந்தவர்களின் உடல்களை குடும்பங்களுக்கு ஒப்படைக்க மொத்தம் 230 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இன்று உடல்களை ஒப்படைக்கத் தொடங்கினோம். குடும்பங்களுக்கு எந்த சிரமமும் ஏற்படாமல் இருக்க, இறப்புச் சான்றிதழ்கள் சம்பவ இடத்திலேயே வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு உடலும் போலீஸ் பாதுகாப்புடன் ஆம்புலன்சில் சொந்த ஊருக்கு கொண்டு செல்லப்படும். குடும்பங்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை சமாளிக்க ஆலோசகர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.” என்று அவர் கூறினார்.

## விஜய் ரூபானியின் உடல் அடையாளம் காணப்பட்டது





அஹ்மதாபாத் விபத்து நடந்த இடத்தில், குஜராத் முன்னாள் முதலமைச்சர் விஜய் ரூபானியின் உடல் அடையாளம் காணப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மரபணு பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் அவரது உடல் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மரபணு பரிசோதனை முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டன

கடந்த 12 ஆம் திகதி அஹ்மதாபாத்தில் விமானமொன்று விபத்துக்குள்ளானதில் விமானத்தில் பயணித்த ஒருவரைத் தவிர ஏனைய அனைவரும் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கேதார்நாத் ஹெலிக்கொப்டர் விபத்தில் 7 பேர் உயிரிழப்பு

உத்தராகண்ட் மாநிலம் கேதார்நாத்தில் இருந்து புறப்பட்ட ஹெலிக்கொப்டர் விழுந்து நொருங்கிய விபத்தில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

உத்தராகண்ட் மாநிலத்தின் புனிதத் தலமான கேதார்நாத்தில் இருந்து ஒரு ஹெலிக்கொப்டர் நேற்று குப்தகாஷிக்கு அதிகாலை 5.30 மணிக்கு கிளம்பியது. இந்த ஹெலிகாப்டர் அதிகாலை 6.00 மணியளவில் ருத்ரபிரயாகையை கடக்க முயன்றபோது பெரும் விபத்துக்குள்ளானது. ருத்ரபிரயாகின் கவுரிகுண்ட் வனப்பகுதியில் அந்த ஹெலிகாப்டர் விழுந்து நொருங்கியதில், ஹெலிக்கொப்டர் விமோனி, பயணிகள் என 7 பேர் பலியாகினர்.

இந்தத் தகவல் கிடைத்ததும், தேசிய பேரிடர் மீட்புப் படை மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படை குழுக்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். ஆரியன் எனும் தனியார் நிறுவனத்திற்கு இந்த ஹெலிக்கொப்டர் சொந்தமானது. இந்த விபத்து, மோசமான வானிலை காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது



இந்த ஹெலிக்கொப்டர் நேற்று குப்தகாஷியில் இந்து யாத்ரீகர்களுடன் கேதார்நாத்துக்கு பறந்துள்ளது. அனைவரையும் பத்திரமாக இறக்கிய பின் வேறு யாத்ரீகர்களுடன் குப்தகாஷிக்கு திரும்பிய போது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

முன்னதாக, இம்மாதம் ஏழாம் தேதி ருத்ரபிரயாக்கில் ஒரு ஹெலிக்கொப்டர் பெரிய விபத்து தவிர்க்கப்பட்டது. கேதார்நாத்துக்கு கிளம்பிச் சென்ற இந்த ஹெலிக்கொப்டர் நெடுஞ்சாலையில் அவசரமாக தரையிறக்கப்பட்டது. அந்த ஹெலிக்கொப்டரில் இருந்த அனைத்து யாத்ரீகர்களும் விமானிகளும் பாதுகாப்பாக இருந்தனர். தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, அவசரமாக சிர்சி அருகே உள்ள நெடுஞ்சாலையில் தரையிறக்க வேண்டியிருந்தது. அந்த ஹெலிகாப்டரில் விமானி உட்பட 6 பேர் இருந்தனர், அவர்கள் மயிரிழையில் உயிர் தப்பி இருந்தனர். லேசான காயமடைந்த விமானி மருத்துவமனை சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நைஜீரியாவில் கிராமமொன்றில் துப்பாக்கிச் சூடு; 100 பேர் பலி



நைஜீரியாவின் மத்திய பெனுவே மாகாணத்திலுள்ள கிராமமொன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 100 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அடையாளம் தெரியாத சில நபர்களினால் இவ்வாறு துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சம்பவத்தில் 100 பேர் பலியாகிய துடன், பலர் மாயமாகியுள்ளனர் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், துப்பாக்கிச் சூட்டில் 20க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்துள்ளனர்.

முன்னதாக கடந்த மாதம், நைஜீரியாவின் க்வெர் வெஸ்ட் மாவட்டத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 42 பேர் உயிரிழந்தனர்.

இந்தநிலையில் கடந்த 2019ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப் பகுதியில், நைஜீரியாவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 500 பேர் உயிரிழந்ததுடன், 22 லட்சத்திற்கும் மேற்பட்டோர் அங்கிருந்து இடம்பெயர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# டுபாயில் 67 மாடிக் கட்டடத்தில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது



டுபாய் – மெரினாவில் உள்ள 67 மாடிக் கட்டடத்தில் பெரும் தீ விபத்து ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்த தீ விபத்து தொடங்கியதைத் தொடர்ந்து, அடுக்குமாடிக் குடியிருப்புகளிலிருந்து 3,820 குடியிருப்பாளர்களும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

சுமார் ஆறுமணிநேரத்துக்குள், சிவில் பாதுகாப்புக் குழுக்களால் தீ அணைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பாதுகாப்பு அமைச்சு குறிவைக்கப்பட்டது



## உறுதிப்படுத்தியது ஈரான்

ஈரானின் பாதுகாப்பு அமைச்சின் தலைமையகம் குறிவைக்கப்பட்டதாக ஈரானிய அதிகாரி உறுதிப்படுத்தியுள்ளார் என பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரானின் மத்திய மாகாணமான இஸ்ஃபஹானில் உள்ள பாதுகாப்பு அமைச்சின் தலைமையகமே இவ்வாறு குறிவைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு விவகாரங்களுக்கான இஸ்ஃபஹான் துணை ஆளுநர் அக்பர் சலேஹி கூறுகையில், இதுவரை உயிரிழப்புகள்குறித்துஎந்ததகவலும்கிடைக்கப்பெறவில்லை என்றும் சேத விபரங்கள் தொடர்பில் மதிப்பிடப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 16.06.2025




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். முன்னேற்றம் தாமதமாக ஏற்படும். இதனால் கவலை ஏற்படும். பயணங்கள் ஆறுதல் அளிக்கும்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. பணிகளில் தவறுகள் நேரலாம். உங்கள் செயல் திறனைக் கண்டு மேலதிகாரிகள் அதிருப்தி அடைவார்கள்.

இன்று இருவரிடையே மகிழ்ச்சி காணப்படாது. மந்தமான மனநிலை காரணமாக இருவரும் மகிழ்ச்சியாக இருக்கும் நிலை காணப்படாது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

தோல் அரிப்பு ஏற்படாமல் இருக்க ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எண்ணெய் பதார்த்தங்களை தவிர்ப்பது நல்லது.




இன்று எதிர்பாராத நன்மைகள் நடக்கும். உங்கள் சமயோசித புத்தி மூலம் வெற்றி காண்பீர்கள்.

உங்கள் செயல்திறன் திறமையை மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். நீங்கள் விரைந்து பணிகளை முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வோடு நடந்து கொள்வீர்கள். இது உறவை இன்னும் பலப்படுத்தும்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும்.காப்பீடு அல்லது பூர்வீக சொத்து வகையில் பண வரவு காணப்படும்.

உங்களின் திருப்தியான மன நிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் விருப்பங்கள் மற்றும் இலக்குகளில் வெற்றி பெறுவதற்கு உகந்த நாள். புதிய தொடர்புகளை இன்று நீங்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது கவனமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற இயலும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் நம்பிக்கையோடு வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கமும் பிணைப்பும் அதிகரிக்கும்.

நிதிநிலைமை இன்று பிரகாசமாக இருக்கும்.பணத்தை ஆக்கப்பூர்வமான விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

உங்களின் உறுதியான மன நிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




முக்கிய விஷயங்களை இன்று தொடங்குவதற்கு உகந்த நாள் அல்ல. இன்று அமைதியின்மையும் பாதுகாப்பின்மை உணர்வும் காணப்படும். பிறருடன் பேசும் போது கவனம் சேவை. பிரார்த்தனை மூலம் அமைதி பெறலாம்.

இன்று பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. திறமையாக பணியாற்ற திட்ட்டமிட வேண்டியது அவசியம்.

இன்று நன்மை காண பொறுமை அவசியம். இன்று உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் பேண இந்த உணர்வை தவிர்க்க வேண்டும்.

பொறுப்புகள் அதிகமாக காணப்படும். குடும்பச் செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறய அளவில் கடன் வாங்குவீர்கள்.




இன்று உணர்ச்சிவசப்பட நேரலாம். இதனால் தன்னம்பிக்கை இழக்க நேரிடும். இதயம் கனப்பதாக உணர்வீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் செய்ய இயலாது. இதனால் கவலை ஏற்படும். சக பணியாளர்களுடனான உறவு முறை சிறப்பாக இருக்காது.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகள் ஏற்பட்டு பணம் கரையும். இன்று பணத்தை சேமிக்க இயலாது.

தொண்டை சம்பந்தமான பிரச்சினை மற்றும் தலை வலி காணப்படுகின்றது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் அக்கம்பக்கதினர்கள் ஆதரவாக இருப்பார்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். முக்கிய முடிவுகள் இன்று நல்ல பலனளிக்கும்.

உங்கள் செயல் திறனுக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்களின் அபாரமான திறமையைக் கண்டு சக பணியாளர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணத்தை சேமிப்பதற்கான சிறந்த வாய்ப்புகள் உள்ளன. பங்கு போன்ற இதர வகைகள் மூலமாகவும் பணம் வரும் வாய்ப்பு உள்ளது.

கடவுள் அருளால் இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வலிமையுடன் இருப்பீர்கள்.




இன்று வெற்றி பெறுவதற்கு திட்டமிட வேண்டியது அவசியம். எளிதில் வெற்றி காண்பதை கடினமாக உணரவீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிச்சுமை உங்களுக்கு கவலையை அளிக்கும். பாதுக்கப்பின்மை உணர்வு நிறைந்து காணப்படும்.இதனால்பணிகளைதிறமையாகசெயல்படுத்த இயலாது.

உங்கள் உறவில் திருப்திகரமான நிலை இருக்காது. உங்கள் அகந்தைப் போக்கை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள்.இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

நிதிநிலை திருப்திகரமாக இருக்காது. உங்களின் நெருங்கிய நபர் ஒருவருடைய உடல் நலத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.




இன்று திருப்தி குறைந்து காணப்படும். கவனமாக திட்டமிட்டால் வெற்றி பெறலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் கடினமாக இருக்கும். குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. தாமதங்களை தவிர்க்க முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் சண்டையிடுவீர்கள். உங்கள் மனதை மாற்றிக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும். இதனால் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்க முடியும்.

அஜாக்கிரதை மற்றும் கவனமின்மை காரணமாக பண இழப்பு நேரலாம். இன்று பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலி ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.06.2025




இன்று மந்த நிலையும் பாதுகாப்பின்மை உணர்வும் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு திருப்தியை அளிக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பணிகளை ஒப்படைக்கும் முன்பு சரிபார்த்து தருவது சிறந்தது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். என்றாலும் அகந்தை உணர்வு தலை தூக்கும். அதனைத் தவிர்த்து இருவரும் மனம் திறந்து பேச வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. அதிகரிக்கும் செலவுகளை சமாளிப்பது கடினமாக உணர்வீர்கள். இன்று அதிகமாக சேமிக்கவும் இயலாது.

இன்று ஆரோக்கியம் ஸ்திரமாக இருக்கும். உங்கள் தந்தையின் ஆரோக்கியத்துக்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று அபாரமான நாள். உங்கள் இனிமையான வார்த்தை உங்கள் நெருங்கிய உறவுகளை மகிழ்ச்சி யுறச் செய்யும். உங்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் அபாரமாக இருக்கும். சக பணியாளர்களுக்கு நீங்கள் உதாரணமாக இருப்பீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையை வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் அவருக்கு மகிழ்ச்சி உண்டாகும். நீங்கள் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இருவரும் சிறந்த ஜோடியாகத் திகழ்வீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். நிதிநிலை சுதந்திரமாக் இருக்கும்.




இன்று வளர்ச்சி காணப்படும். உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை மூலம் இலக்கில் வெற்றி பெறுவீர்கள். ஸ்திரமான முடிவுகள் வெற்றிக்கு வழி வகுக்கும்.

பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. உங்களின் நேர்மையான முயற்சி உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும்.

நீங்கள் இருவரும் நல்ல தொடர்புடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். வெளியிடங்களுக்குச் சென்று ஒன்றாக இணைந்து மகிழ்ச்சியாக நேரத்தை செலவு செய்வீர்கள்.

உங்களின் கடின உழைப்பிற்காக ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் இன்று கூடுதல் பண வரவு காணப்படும்.

இன்று ஆற்றல் நிறைந்து காணப்படுவீர்கள்.




இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். இது உங்கள் மகிழ்ச்சியைக் குறைக்கும். உங்கள் வளர்ச்சியில் தாமதங்கள் காணப்படும். விரைந்து முடிவெடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளை மேற்கொள்ளும் போது திட்டமிட வேண்டும். பணிச்சுமை அதிகமாக காணப்படும். வெற்றி பெறுவதற்கு திறமையாக கையாள வேண்டும்.

உங்களின் மாறுபடும் மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். எனவே சம நிலையோடு இருந்து உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். சேமிப்பதில் கட்டுப்பாடு காணப்படும்.

## தயா கமகேவின் 3 நிறுவனங்களை பகிரங்க ஏலத்தில் விற்க நடவடிக்கை



ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தயா கமகேவுக்குச் சொந்தமானதாகக் கூறப்படும் மூன்று நிறுவனங்கள், பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இது தொடர்பான உத்தரவை,கொழும்பு வணிக மேல் நீதிமன்றம் விடுத்துள்ளது.

இதன்படி, மேற்படி ஏலம், 2025 ஜுலை 2 ஆம் திகதியன்று நடைபெறும் என்று கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தின் பதிவாளர் அறிவித்துள்ளார்.

குத்தகை நிறுவனம் ஒன்றுக்கு செலுத்த வேண்டிய சுமார் 10 கோடி ரூபா தொகையை வசூலிக்கவே, இந்த மூன்று நிறுவனங்களையும் ஏலம் விடுவதற்கு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

## பிரபல நடிகர் மோகன்லால் உள்ளிட்ட படக்குழுவினர் இலங்கைக்கு வருகை

பிரபல இந்திய நடிகர் மோகன்லால் மற்றும் நடிகர் குஞ்சாக்கோ பாபன் உள்ளிட்ட படக்குழுவினர் படப்பிடிப்பிற்காக நேற்று இலங்கை வந்துள்ளனர்.

பேட்ரியோட் என்ற திரைப்படத்தின் படப்பிடிப்பிற்காக மேற்படி நடிகர்கள் உள்ளிட்ட படக்குழுவினர் இலங்கை வந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவில் 08 மொழிகளில் இந்த திரைப்படத்தை வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி படக்குழுவினர் முற்பகல் 11.20 அளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

